SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

## 2015 யூலை - AA1 பரீட்சை

**(July 2015 Examination - AA1 Level)**

**வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்**

**பாட இலக்கம் : 14**

# வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும் (BLE)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**

இல, 640, வென். முறுத்தெட்டுவெ ஆனந்த நகிமி மாவத்தை,

நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

## இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்
கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

# AA1 பரீட்சை – 2015 யூலை
# (14) வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**எல்லா வினாக்களுக்கும் விடை எதிர்பார்க்கப்படுகிறது.**

### முதலாம் வினாவுக்கான விதந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா | விடை |
|---|---|
| 1.1 | (2) |
| 1.2 | (3) |
| 1.3 | (3) |
| 1.4 | (1) |
| 1.5 | (1) |
| 1.6 | (2) |
| 1.7 | (1) |
| 1.8 | (3) |
| 1.9 | (1) உம் (3) |
| 1.10 | (1) |
| 1.11 | (2) |
| 1.12 | தவறு |
| 1.13 | சரி |
| 1.14 | தவறு |
| 1.15 | (1) இலகுவான கைமாற்றத்தக்க(உடன்பாட்டு)த்தன்மை<br>(2) வைத்தியிருப்பவர்கள் தனது சொந்த பெயரில் வழக்குத் தொடரலாம் |
| 1.16 | பின்வருவனவற்றில் ஏதாவது இரண்டு (2):<br>(1) ஒருமைப்பாடு (2) உரிய நியாயமான கவனமும் திறனும்<br>(3) சுயாதீனம் (4) இரகசியத்தன்மை<br>(5) நேர்மை (6) தொழிநுட்பத் திறன் |
| 1.17 | கடந்த மாத சம்பளம் x 1/2 x சேவையின் பூர்த்திச்செய்யப்பட்ட வருடங்கள் = உபகார கொடுப்பனவு |
| 1.18 | இணக்கப்பாடு,நடுத்தீர்ப்பு, தொழில் நியாயசபைகள், கைத்தொழில் நீதிமன்றங்கள் மற்றம் கூட்டு உடன்படிக்கை |

*பகுதி A முடிவு*

**பகுதி - B**

**நான்கு வினாக்கள்– ஒவ்வொன்றும் 8 புள்ளிகளை கொண்டுள்ளது மொத்தம 32 புள்ளிகள்**
**எல்லா வினாக்களுக்கும் விடைகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன**

## இரண்டாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பின்வருவனவற்றில் எவையேனும் நான்கிற்கு(4)**

1. முகவரால் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளும் போது முதல்வர் ஒப்பந்த இயலுமையைக் கொண்டு தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. முகவர் ஒருவர் தான் ஒப்பந்தமொன்றில் நுழைந்துள்ளது பற்றியும் முதல்வரின் பெயரையும் மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தல் வேண்டும்.
3. ஓபபந்தம் தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து விடயங்களையும் முதல்வருக்கு அறிவித்தல் வேண்டும்.
4. வெறுமனே ஒரு பகுதியளவில் அன்றி முழு ஒப்பந்தமும் உறுதி செய்யப்படல் வேண்டும்.
5. உறுதிப்படுத்தலானது குறிப்பிட்ட காலவரையறைக்குள் மேற்கொள்ளப்படல் வே:ண்டும்.
6. சட்டவிரோதமான அல்லது வலிதற்ற ஒப்பந்தங்கள் உறுதி செய்யப்பட முடியாது.

## மூன்றாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பின்வருவனவற்றில் ஏதேனும் மூன்று(3)**

1. **வரையறுக்கப்பட்ட பொறுப்பு**

   "வரையறுக்கப்பட்டது" என்ற பதமானது பங்குதாரர்களின் நோக்கிலேயே விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். இதன் பொருள் யாதெனில், பங்குதாரர்கள் ஏதேனும் தொகை செலுத்தாது இருந்தால் மட்டுமே கம்பனியின் சொத்துக்களுக்காக பங்களிப்பு செய்ய வேண்டிய பொறுப்பு பங்குதரரர்களுக்கு உண்டு என்பதாகும். இது அவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதியின் அளவிற்கு உட்பட்டதாகும்.

   ஆனால், ஒரு தனி வியாபாரத்தில் அல்லது பங்குடமையில் உள்ள உரிமையாளர் / பங்குதாரர்கள் நிறுவனத்தற்கான பொறுப்புக்களுக்கு வரையறையற்ற பொறுப்புக்களைக் கொண்டுள்ளார் / கொண்டுள்ளனர்.

2. **பொது மக்களுக்கு பங்குகள் வழங்குதல்**

   ஒரு பொதுக்கம்பனியாயின், அது பொதுமக்களுக்கு பங்குகளை வழங்க முடியும். எனவே பெருந்தொகையான பணத்தை மூலதனமாக கம்பனியால் சேகரிக்க முடியும்.

3. **சட்ட ஆளுமை**

   கம்பனியொன்றை கூட்டினைக்கப்பட்டதன் பின்னர் அது வேறுபடுத்தப்பட்ட ஆளாக அதனை உருவாக்கிய, சொந்தமாக கொள்ளும் மற்றும் முகாமைப்படுத்தப்படுத்தும் ஆட்களால் கருதப்படும். இதனால் அது ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு அல்லது ஆதனங்களை சொந்தமாகக் கொள்வதற்கு தனது சொந்தப் பெயரால் வழக்குத் தொடுப்பதற்கு முடியும்.

4. **தொடர்ச்சியாக முன் கொண்டு நடாத்துதல்**

அங்கவத்தவர்களின் அல்லது பணிப்பாளர்களின் இறப்பு அல்லது மாற்றம் கம்பனியொன்றின் இருப்பை பாதிக்காது.

(b) அமைப்பு அகவிதியின் உள்ளடக்கங்கள். பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டு (2).

1. கம்பனின் நோக்கம்
2. பங்குதாரர்களின் உரிமைகளும் சலுகைகளும்.
3. கமபனியின் முகாமை மற்றும் நிர்வாகம் தொடர்பான விதிமுறைகள

## வினா நான்கிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**உரிய காலத்தில் கொள்ளுநர் ஆவதற்கு நிறைவு செய்ய வேண்டிய தேவைப்பாடுகள்.**

**பின்வருவனவற்றில் எவையேனும நான்கிற்கு**

1. உண்டியலானது முகத்தோற்றத்தில் பூர்த்தியானதாகவும் ஒழுங்குடையதாகவும் காணப்படல் வேண்டும்.
2. வைத்திருப்பவர் உண்டியலொன்று காலம் கடக்கும் முன்னர் அதனை எடுத்தல் வேண்டும்.
3. உண்டியலானது முன்பு மதிப்பிழந்திருந்தால், அவ்வாறான முன்னைய மதிப்பிழத்தல் தொடர்பாக உண்டியலை வைத்திருப்பவர் தெரிந்திருக்கக் கூடாது.
4. வைத்திருப்பவர் உண்டியலினை நல்லெண்ணத்துடன் எடுத்திருத்தல் வேண்டும்.
5. வைத்திருப்பவர் உண்டியலிற்கான பெறுமதியினை தான் கொடுத்திருத்தல் வேண்டும். எனவே, பெறமதியானது வைத்திருப்பவர் சார்பாக வேறு எவரேனும் செலுத்த முடியாது.
6. உண்டியலானது வைத்திருப்பவர் உண்டியல் பரிமாற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் யாரால் வழங்கப்பட்டதோ அந்நபருக்கு குறித்த உண்டியலில் உரித்தில்லை அல்லது குறைபாடுடைய உரித்து காணப்படாமையை அறிந்திராத சந்தர்ப்பத்தில்.

## வினா ஐந்திற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) X ஒரு பெண் தொழிலாளர் ஆயின் அவர் வேலையிலிருந்து 50வது வயதில் ஒய்வு பெறும் போது ஊ.சே.நிதியை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர் தொடர்ந்து வேலையில் நீடிப்பாராயின், அவர் வேலையிலிருந்து விலகும் வரை ஊ.சே.நிதியை பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் ஒரு ஆண் தொழிலாளராயின் அவரது 50வது வயதில் ஊ.சே.நிதியை பெற்றுக்கொள்ள முடியாது.

(b) X ஊ.சே.நிதியை மீளப்பெற முடியாது. ஆணோ பெண்ணோ அவர் நாட்டை விட்டு நிரந்தரமாக செல்வாராயின் ஊ.சே.நிதியை அவரால் பெற்றுக்கொள்ள முடியும்.

(c) X ஒரு ஆணோ பெண்ணோ பொதுத்துறையில் ஓய்வூதிய நிரந்தர நியமனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் போது ஊ.சே.நிதியை அவரால் பெற்றுக்கொள்ள முடியும்.

(d) ஒரு பெண் தொழிலாளர் திருமண நோக்கத்திற்காக வேலையிலிருந்து விலகும் போது ஊ.சே. நிதியை அவரால் மீளப்பெற்றுக் கொள்ள முடியும். எவ்வாறெனினும் ஒரு ஆண் தொழிலாளர் திருமண நோக்கத்திற்காக வேலையிலிருந்து விலகும் போது ஊ.சே.நிதியை அவரால் மீளப்பெற்றுக் கொள்ள முடியாது.

**பகுதி *B* முடிவு**

## பகுதி - C

**இரண்டு வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 14 புள்ளிகள்**
**அனைத்து வினாக்களுக்கும வடைநள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன.**
**மொத்த = 28 புள்ளிகள்**

### வினா ஆறுக்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) 1. **கொடை முனைவு**
ஓப்பந்தமொன்றில் நுழையும் நோக்கத்திற்காக நபரொருவர் இன்னொரு நபருக்கு மேற்கொள்ளப்படும் தீர்க்கமான பிரேரணையாகும்.

2. **ஏற்பு**
நிபந்தனையொற்றி கொடை முனைவானது ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அலலது கொடைமுனைவைப்பெறுபவர் ஒரு புதிய கொடைமுனைவை கொடைமுனைவாளரின் கொடைமுனைவுக்கு மேற்கொள்வாராயின் அது ஓர் எதிர் கொடைமுனைவாகக் கொள்ளப்படும். எனவே ஏற்பு என்பது கொடைமுனைவின் ஒரு நிபந்தனையற்ற அங்கீகாரமாகும்.

3. **நல்லேது**
வுலிதான ஒப்பநதம் ஒன்றை மேற்கொள்வதற்கு ஒரு பெறமதியிலான மறுபயன் அல்லது நியாயமான கடப்பாடு ஒன்று இருத்தல் வேண்டும்.

4. **சட்டரீதியான உறவுகளில் ஈடுபடுவதற்கான எண்ணம்.**
இரு தரப்பினரும் ஒப்பந்தத்திற்குள் நுழையும் நேரத்தில் அவர்களில் யாரேனும் தரப்பினர் ஒப்பந்தத்தின் கீழ் அவர் சட்ட ரீதியான உறவினை உருவாக்கும் எண்ணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. **ஒப்பந்த உரு**
பொதுவான விதியாக தரப்பினர்கள் எந்த உருவிலும் எந்த ஒப்பந்ததத்திலும் நுழையலாம். ஆனால் இவ்விதி சட்டரீதியான ஏற்பாடுகளால் பாதிப்புக்குட்படும்.
இதன் பொருள் யாதெனில் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு சட்டரீதியான ஏற்பாடு இருக்குமாயின், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தரப்பினர்கள் ஒப்பந்தத்திற்குள் நுழைதல் வேண்டும்.

(b) பராயமடையாதவர் என்பது 18 வயதிற்கு குறைந்த வயதைக் கொண்டவராவர். எனவே சாமர ஒரு பராயமடையாதவர். பராயமடையாதவர் அனுபவமற்ற நிலையில் இருப்பதால் மற்றவருடன் ஒப்பந்தத்தில் அவர் நுழையும் போது அப்பராயமடையாதவருக்கு பாரபட்சமான.்.தப்பெண்ண நிலைமை ஏற்படலாம். அதனால் சட்டத்தால் அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

எனவே ஒரு தரப்பினர் பராயமடையாதவருடன் ஒப்பந்தம் கொள்ளுவாராயின் அது வலிதற்றதாக்க கருதப்படும். இதன் பொருள் யாதெனில், பராயமடையாதவர் அவரது அபிப்பிராயத்தின் மீது ஒப்பந்தத்தை எவ்வித பொறுப்புக்களையும் ஏற்காது ஒப்பந்தத்தை மேற்கொண்ட பிறகு

எவ்வேளையிலும் ஏற்க மறுக்கலாம். இவ்விதிக்கு விதிவிலக்கான நிலைமைகளும் உண்டு. இவ்விதிவிலக்கின் கீழ் பாரயமடையாதவர் வயதடைந்த ஒருவராக ஒப்பந்தமொன்றால் கட்டுப்படுத்தப்படலாம்

விதிவிலக்கான நிலைமைகளில் ஒன்று பராயமடையாதவரின் கல்வி, பயிற்சி, சேவைகள் அல்லது தொழில் பயிற்சி

உதாரணம்: AG VS Costa

இங்கு சாமர ஒரு பயிற்சி கல்லூரியில் பயிற்சியொன்றுக்குள் பிரவேசிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் நுழைகின்றார். எனவே சாமர ஒப்பந்தத்தால் கட்டுப்படுகின்றார். சாமர ஒப்பந்தத்தினை ஏற்க மறுத்தால் அரசாங்கம் (மற்றத் தரப்பினர்) சாமரவிடமிருந்து இழப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகளைக் கொண்டு வரலாம்.

## வினா ஏழாம் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

1. விற்பனையாளர் ஓர் வணிக முகவராக இருந்தால்
2. விற்பனையாளர் ஒரு சட்டத்தினாலான அதிகாரத்தின் கீழ் பொருட்களை விற்பனை செய்திருந்தால். (வலிதற்ற.ீசெல்லுபடியற்ற உரித்துடனான நபரினால் விற்பனை).
3. மறுக்கவியலாமை: இங்கு விற்பனையாளர் அதிகாரத்தைக் கொண்டுள்ளார் என உரிமையாளர் மறுப்பதிலிருந்து தவிர்க்கப்படுவார்.
4. விற்பனையாளரால் பொருட்களின் உடமையை அல்லது உரித்து ஆவணத்தை ஐவத்திருத்தல்.
5. வாங்குபவரால் பொருளின மீதான உடமையை அல்ல உரித்து ஆவணத்தை வைத்திருத்தல்.
6. விற்பனையாளர் நிதிமன்ற கட்டளையிலிருந்தான அதிகாரத்தில் பொருட்களை விற்றல்
7. சந்தையில் வெளிப்படையான விற்பனை.

(b) இங்கு செகான் பொருள் விற்பனை ஒப்பந்தமொன்றில் நுழைந்துள்ளார். பொருள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் படி பின்வரும் பதங்கள் பொருள் விற்பனை ஒப்பந்தத்தில் ஒரு உட்கிடையான பதமாக உள்ளடக்கப்பட்டுள்ளன எனக் கருதுதல் வேண்டும்.

**1. நோக்த்திற்கு பொருத்தமாக இருத்தல்**

வாங்குபவர் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக விற்பனையாளருக்கு தெரியப்படுத்தும் பட்சத்தில், பண்டங்கள் எந்நோக்கத்திற்காக தேவைப்படுகின்றதோ அந்நோக்கத்திற்கு பொருட்களானவை நியாயமான வகையில் பொருத்தமாக இருக்கும் என்ற உட்கிடையான நிபந்தனையைக கொண்டதாகும்.

எனவே, செகான் மேற்சட்டை (சேர்ட்) ஒன்றை கோரும் போது விற்பனையாளருக்கு உட்கிடையாக இச் சேர்டின் நோக்கமானது அணிவதற்கு என்பது உட்கிடையாக தெரியப்படுத்தியுள்ளார். எனவே சேர்ட்டானது இரசாயண பொருட்களைக் கொண்டிருக்குமாயின் அது தோல் வியாதிகளுக்கு காரணமாகலாம். அவ்வாறான சேர்ட் நோக்கத்திற்கு பொருத்தமானது அல்ல.

**2. வணிகத்திற்கு உகந்த தரம்**

விற்பனையாளரிடமிருந்து (அவர் உற்பத்தியாளராக இருக்கலாம் அல்லது இல்லாதும் இருக்கலாம்) பொருட்களை கொள்வனவு செய்யும் போது அவை குறித்த நோக்கத்தை நியாயமான வகையில் நிறைவு செய்வதற்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். அவ்வாறான பொருட்களே பொதுவாக அந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவனவாக

aat SRI LANKA

இருத்தல் வேண்டும். பொருட்களை பரிசோதனையின் போது வெளிப்படையாக தெரியாத எந்த வகையான குறைபாடுகளையும் அப்பொருட்கள் கொண்டிருத்தல் கூடாது.

எனவே சேர்ட் ஏதேனும் இரசாயணத்தைக் கொண்டிருக்குமாயின் அது தோல் வியாதிக்கு காரணமாகலாம். சேர்ட்டை நியாயமான வகையில் பரசோதிக்கும் போது அது வெளிப்படையாக தென்படுவதில்லை. எனவே, சேர்ட் வணிகத்திற்கு உகந்த தரமல்ல. மேற்படி இரு உட்கிடையான நிபந்தனைகள முறிவுக்குட்பட்டமையால் செகான் விற்பனையாளரிடமிருந்து இழப்பீட்டைக் கோர முடியும்.

aat SRI LANKA

*பகுதி C முடிவு*